**In the Court of the Principal District Judge, Vellore District.**
**Deposition of Witness for P.W.5**
**SC.No.138/2017**

**Name : Murali @ Srinivasan**
**Father/Husband Name : K.S.Krishnamoorthy**
**Village : Ambur**
**Taluk : Ambur**
**Caste : Brahmin (O.C.)**
**Calling/Occupation : Business**
**Religion : Hindu**
**Age : 55**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.11.2022.**

முதல் விசாரணை

. எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசல் ஆதார் அட்டையுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததின் பேரில் அசல் மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டது) அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நான் ஆம்பூர் கிருஷ்ணாபுரத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பி.எஸ்.ஸி. வரை படித்துள்ளேன். நான் டேனரி மெஷினரி மற்றும் ஸ்பேர்ஸ் தயாரித்து விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.2 கவுஸ்பாஷா மற்றும் அ.சா.3 ஷாஜஹானையும் தெரியும். இவ்வழக்கில் 1-வது எதிரி மார்டின் பிரேம்ராஜை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள 2 , 4 முதல் 6 எதிரிகளையும் மற்றும் ஆஜரில் இல்லாத 3வது எதிரி நாகராஜையும் தெரியாது. சாட்சி ஷாஜகானை கடந்த 20 வருடங்களாக தெரியும். அவர் ஆம்பூர் பூந்தோட்டத்தில் இருந்தார். அதற்கு பிறகு ஈரோடுக்கு சென்றார். அதற்கு பிறகு சொந்த ஊரான சேலம், வேலூருக்கு போய்விட்டார். ஷாஜஹானின் மகனான ஷமீல் பாஷா ஆம்பூரில் டெல்டா ஷூ கம்பெனியில் வேலை செய்து வந்தார். அவருடைய திருமணத்திற்கு நான் சென்றுள்ளேன். ஆனால் திருமணம் எப்போது நடந்தது என்று எனக்கு நியாபகம் இல்லை. அதற்கு பிறகு ஷமீல் பாஷா அவர் அப்பாவுடன் ஈரோட்டுக்கு வேலைக்கு சென்றுவிடடார். ஷமீல்பாஷாவின் மாமானார் கவுஸ் பாஷா ஆவார். 18.06.2015 அன்று ஷாஜஹான் பாய், எனக்கு போன் செய்து

நாளை என்னால் வர முடியாது நீங்கள் சென்று என் மகனை பள்ளிகொண்டா போய் கூட்டி வந்து விடுங்கள். உங்களுடன் கவுஸ்பாஷாவும் வருவார் என்று சொன்னார். 19.06.2015 நானும், கவுஸ் பாஷாவும் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்று அவரை சாயங்கால நேரத்தில் காவல் நிலையத்தில் இருந்து கூட்டி வந்தோம். நாங்கள் போகும்போது பள்ளிகொணடா காவல் ஆய்வாளர் திரு மார்டின் பிரேம்ராஜ் இருந்தார். அங்கு வேறு யார் இருந்தார்கள் என்று எனக்கு நியாபகம் இல்லை. நான் காவல் நிலையத்திற்கு ஷாஜஹான் மகன் ஷமீல் பாஷா-வை பார்த்தேன். அப்போதுதான் காவல் நிலையத்திற்கு கூட்டி வந்தார்கள். அதைப் பார்த்தேன். ஆய்வாளரை நான் விசாரித்தேன். அப்போது ஆய்வாளர் ஷமீல்பாஷா உண்மையை சொல்ல மாட்டேன் என்கிறார். நீங்கள் கூட்டி செல்லுங்கள். ஒரு வாரத்தில் திரும்ப அழைத்து வர வேண்டும். அவர் உண்மையை சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பிறகு கையெழுத்து போட்டுவிட்டு கூட்டி செல்லுமாறு சொன்னார்கள். அப்போது ஷமீல்பாஷா வால் கையெழுத்து போடமுடியவில்லை. அவர் கை வீங்கி இருந்தது. கைநாட்டு வைத்தார். அவர் கையெழுத்து போட்ட பேப்பரை ரைட்டர் எழுதியிருக்கலாம். யார் எழுதிக் கொண்டு வந்தார்கள் என்று எனக்கு நியாபகம் இல்லை. நாங்கள் பார்க்கும்போது ஷமீல் பாஷா சோர்வாக இருந்தார். நானும் கவுஸ்பாஷவும் ஷமீல்பாஷாவை கூட்டி சென்று வெளியில் வந்து விட்டோம். அதன் பிறகு பஸ் ஏறி ஆம்பூர் சென்று விட்டோம். அதன்பிறகு ஒரு வாரம் கழித்து 26.06.2015ம்தேதி ஷமீல்பாஷா இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். அப்போது ஆம்பூரில் கலாட்டா நடந்ததாக சொன்னார்கள். நான் ஊரில் இல்லை. ஷமீல்பாஷா ஆய்வாளர் தாக்கி இறந்துவிட்டதால் அந்த மரணம் குறித்து கலாட்டா நடந்ததாக சொன்னார்கள். அது சம்மந்தமாக சிபிசிஐடி போலிசார் 11.10.2015 அன்று என்னை விசாரித்தார்கள். இதற்கு முன்பு வேலூர் நீதிமன்றத்தில் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை ( 1வது மற்றும் 6வது எதிரிகள் தரப்பில் )

என்னுடைய பதிவேடுகளில் என் பெயர் சீனிவாசன் என்று உள்ளது. சிபிசிஐடி போலிசார் இடமும் சீனிவாசன் என்று தான் சொன்னேன். ஷாஜஹான் 18.06.2015 அன்று போன் செய்து சொன்னதாக சொன்னீர்கள். அவர் போனில் சொன்னார். ஆனால் எந்த நெம்பரில் இருந்து சொன்னார் என்று நியாபகம் இல்லை. என்னுடையை நெம்பரை போலிசாரிடம் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் என்னுடைய குவிமுச 161 ஸ்டேட்மெண்டில் என்னுடைய போன் நெம்பர் சொல்லப்படவில்லை. 18.06.2015 அன்று மாலை போன் செய்தார். குறிப்பிட்ட நேரம் நியாபகம் இல்லை. 18.06.2015 அன்றே ஷாஜஹானிடம் இருந்து எனக்கு போன் வந்தது. என்னால் வர இயலாது. உன்னுடன் என் சம்மந்தி வருவார். நீங்கள் போய் என் மகனை அழைத்து வாருங்கள் என்று சொன்னார். இதை தான் நான் போலிஸ் இடம் சொன்னேன். என்னுடைய குவிமுச 161 ஸ்டேட்மெண்டில் 18.06.2015 அன்று சொன்னதாக இல்லை. 19.06.2015 என்று உள்ளது. நாங்கள் காவல் நிலையம் செல்லும்போது பிற்பகல் சுமார் 3.00 மணி இருக்கும். என்னுடைய குவிமுச 161 ஸ்டேட்மெண்டில் சுமார் 3.00 மணி என்று இல்லை. 12.30 மணி என்று உள்ளது. அந்த காவல் நிலையத்தில் உள்ளே நுழைந்தவுடன் ஒரு பி. சி. நின்றுகொண்டு இருந்தார். அவரிடம் கேட்டேன். அவரிடம் நாங்கள் பையனை கூட்டி செல்வது சம்மந்தமாக வந்திருப்பதாக சொன்னேன். உள்ளே சென்றோம். அங்கு ஆய்வாளர் இருந்தார். எங்களை அமர சொன்னார். முன்னாடி நின்றுகொண்டிருந்த காவலர் பெயரை நான் கேட்கவில்லை. என்னை சிபிசிஐடி போலிசார் விசாரித்தபோது ஆய்வாளர் பெயரை மட்டும் மார்டின் என்று சொன்னேன். மற்ற பெயர்களை நான் சொல்லவில்லை. மார்டின் பிரேம்ராஜை எனக்கு முன்பே தெரியாது. ஆய்வாளர் முன்பு நாங்கள் உட்கார்ந்திருந்தபோது அவர் பெயரை கவுஸ்பாஷா தான் என்னிடம்

சொன்னார். அப்போது தான் நானும் அவர் பெயர் பலகையை பார்த்தேன். காவல் நிலையத்தில் இருந்து நாங்கள் வெளியே வந்தபோது எத்தனை மணி என்றால் எனக்கு நியாபகம் இல்லை. ஷமீல்பாஷாவை நாங்கள் கூட்டி வந்தபோது நானும் கையெழுத்து போட்டேன். ஆய்வாளர் மார்டின் முன்பாக கையெழுத்து போட்டேன். என்னுடைய விசாரணையிலும் மார்டின் முன்பாக கையெழுத்து போட்டதாக சொல்லியுள்ளேன். இப்போது சொன்னதைதான் நீதிமன்றத்தில் விசாரிக்கும்போதும் சொன்னேன். காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு போனோம் எத்தனை மணிக்கு வந்தோம் என்ற விவரத்தை நீதிமன்றத்தில் நான் சொன்னேனா என்று எனக்கு நியாபகம் இல்லை. சிபிசிஐடி போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்பது நியாபகம் இல்லை. ஷாஜஹான் என் நண்பர் என்பதால் அவர் மகன் இறந்த விவரம் குறித்து நான் ஒரு பொய்யான சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 முதல் 5 எதிரிகள் - 1வது மற்றும் 6வது எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை அனுசரிக்கிறார்கள்

மறுவிசாரணை இல்லை

N VASANTHALEELA

Digitally signed by N VASANTHALEELA